வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில்

# 7 நாட்கள் புகைப்பட கண்காட்சி

சென்னை, ஆக. 21: மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திகுறிப்பு: ஆண்டுதோறும் ஆகஸ்ட் 23ம் தேதி உலக புகைப்பட தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதை முன்னிட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை புகைப்பட சொசைட்டியும் இணைந்து புகைப்பட கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன. வடபழனியில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 23ம் தேதி முதல் 29ம் தேதி வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெறும். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது. அனுமதி இலவசம். மேலும், மெட்ரோ ரயில் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், பணிமனையில் நடைபெறும் பராமரிப்பு பணிகள், சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கப்படுவது உள்ளிட்டவை பருந்து பார்வையில் புகைப்படங்களாக எடுக்கப்பட்டு இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். இதற்காக சென்னை புகைப்பட சொசைட்டியை சேர்ந்த 38 பேர் கொண்ட குழுவினர் பல்வேறு மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு சென்று 100 புகைப்படங்களை எடுத்துள்ளனர். இதேபோல், 'ஷூட் மெட்ராஸ்' என்ற தலைப்பில் புகைப்பட போட்டியும் அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையின் இயற்கை அழகு, கட்டிடக்கலை மற்றும் இரவில் சென்னையின் அழகு என்ற மூன்று தலைப்புகளில் புகைப்பட போட்டியும் நடத்தப்படுகிறது. இதில் வெற்றி பெருபவர்களின் புகைப்படங்கள் கண்காட்சியில் இடம்பெறும்.